DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C. C No. 43/2025 |
| Deposition of witness | : | P.W – 1 |
| Name | : | பார்வதி |
| Father's /Husband Name | : | வீரையன் |
| Village | : | பேரளம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 68 |
| Occupation | : | ஓய்வு |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 05th day of March, 2025.
Accused Present.

**முதல் விசாரணை:-**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரி சுதாகர் ரூபாய் பத்தாயிரம் என்னிடம் கடன் வாங்கியிருந்தார். நான் பணத்தை திரும்ப தர கேட்டேன் சுமார் 2 1/2 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் எனக்கு தேதி சரியாக நினைவில்லை. அஞ்சம்மாள் வீட்டு வாசலில் இரவு 08.00 மணியளவில் நின்றுகொண்டிருந்தேன். அப்போது ஆஜர் எதிரி மது அருந்திவிட்டு வந்து கட்டையால் எனது தலையில் அடித்தார். அதில் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டு ரத்தம் வழிந்தது. அவ்வாறு அடித்தபொழுது எதிரி கட்டையை காண்பித்து உயிருடன் வைக்க மாட்டேன் என்று மிரட்டினார். அதனால் எனக்கு பயம் ஏற்பட்டது. அவ்வாறு எதிரி என்னை தாக்கியபோது குச்சிகாரி தேவுடியா என அசிங்கமான கொச்சை வார்த்தைகளால் திட்டினார். எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் தொடர்ந்து ஐந்து நாட்கள் வரை சிகிச்சை எடுத்துக்கொண்டேன். எனக்கு எதிரி தரவேண்டிய பணம் ரூபாய் பத்தாயிரம் இதுவரை திரும்ப கொடுக்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

காயம்பட்டதாக சொல்லும் சமயத்தில் நான் எதிரி வீட்டில் வாடகைக்கு குடியிருந்தேன் என்றால் சரிதான். எதிரியின் வீடு தெற்கு பக்கம் வாசல் வைத்த வீடு என்றாலும், அதன் மேற்கு பார்த்த தாய் சுவறில் மூங்கில் மரத்தால் சார்பு கட்டி அதில் கீற்று போட்டு நான் குடியிருந்தேன் என்றால் சரிதான். நான் பேரளம் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேனா என்றால் சென்றேன் ஆனால், உச்சந்தலையில் காயம் இருந்ததால் அங்கு தையால் போடமுடியாது என்று கூறி மருந்து வைத்து என்னை திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். நான் எதிரி கொடுத்ததாக கூறும் பணத்திற்கு ஏதேனும் எழுத்து மூல ஆவணம் எழுதி பெற்றேனா என்றால் வாங்கினேன் ஆனால் அந்த காகிகத்தை

எதிரி வீட்டிற்குள் வந்து மழை பெய்தபோது கிழித்து எரிந்துவிட்டார். காயம்பட்டதாக சொல்லும் சமயத்திற்கு முன்பு மழைக்காலமாக இருந்தது என்றால் சரிதான். காயம்பட்ட அன்று மழை பெய்தது என்றால் லேசான மழைதான் இருந்தது. எனக்கு தலையில் ஏற்பட்ட காயமானது வீட்டின் சார்பு விழுந்து தான் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல என்னை எதிரி அடித்ததை அஞ்சம்மாள் என்பவர் கூட பார்த்தார். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும், எதிரிக்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல. நான் எதிரியிடம் பணம் கொடுத்ததற்கு ஆவணம் எழுதி வாங்கியதாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தங்கியிருந்த வீடு இடிந்து விழுந்ததால் நான் எதிரியிடம் பத்தாயிரம் பணம் கேட்டேன் என்றால் சரியல்ல. அவ்வாறு கேட்ட பணத்தை எதிரி கொடுக்காத காரணத்தினால் தான் நான் மருத்துவமனைக்கு பொய்யாக சென்று எதிரி மீது பொய்யான வாக்குமூலம்அளித்தேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள விபரங்களை போலிசார் விசாரணையில் கூறவில்லை என்றால் கூறியுள்ளேன். நான் பொய்யாக வாக்குமூலம்அளித்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால்சரியல்ல.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C. C No. 43/2025 |
| Deposition of witness | : | P.W – 2 |
| Name | : | அஞ்சம்மாள் |
| Father's /Husband Name | : | முத்துசாமி |
| Village | : | பேரளம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 55 |
| Occupation | : | விவசாய கூலி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 05th day of March,2025.
Accused Present.

**முதல் விசாரணை:–**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எனக்கு தேதி சரியாக கூற தெரியவில்லை. ஒரு நாள் இரவு நான் பேரளம் கல்யாணமண்டபத்தில் கூலி வேலைக்கு சென்று விட்டு வீட்டிற்கு திரும்பிய போது சண்டை நடந்து முடிந்திருந்தது. பார்வதியை நான் பார்த்த போது அவருக்கு தலையில் காயங்கள் ஏற்பட்டிருந்தது. எதிரி அவரை அடித்து அந்த காயங்கள் ஏற்பட்டதாக கூறினார். அவர் அந்த காயத்திற்காக திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(அரசுத்தரப்பில் சாட்சியை பகுதியாக பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதியளிக்கப்பட்டது)

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை :**

போலிசார் விசாரணையில் ஆஜர் எதிரி அ.சா.1–ஐ தாக்கியதை நேரில் பார்த்ததாக வாக்குமூலம் அளித்தேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C. C No. 43/2025 |
| Deposition of witness | : | P.W – 4 |
| Name | : | முருகானந்தம் |
| Father's /Husband Name | : | சுப்ரமணியன் |
| Village | : | நெம்மேலி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 39 |
| Occupation | : | கூலிவேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 05th day of March, 2025.
Accused Present.

**முதல் விசாரணை:–**

தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். பார்வை மகஜரில் உள்ள என்னுடைய கையொப்பத்தை 2025–ல் சென்ற மாதம் 13–ம் தேதி இவ்வழக்கின் சம்பவ இடம் அருகே நானும், காத்தமுத்த என்பவரும் இருந்த போது நன்னிலம் போலிசார் விசாரித்து வரைபடம் வரைந்தார்கள். அதில் நானும், காத்தமுத்து என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். பார்வை மகஜரில் உள்ள என்னுடைய கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் இருந்த விபரம் எனக்கு தெரியாது என்றாலும், அதை போலிசார் என்னிடம் படித்து காண்பிக்கவில்லை என்றாலும் சரிதான். நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C. C No. 43/2025 |
| Deposition of witness | : | P.W – 5 |
| Name | : | காத்தமுத்து |
| Father's /Husband Name | : | நடராஜன் |
| Village | : | நரிக்குடி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 42 |
| Occupation | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 05th day of March, 2025.
Accused Present.

**முதல் விசாரணை:-**

தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். பார்வை மகஜரில் உள்ள என்னுடைய கையொப்பத்தை 13.01.2025-ம் தேதி இவ்வழக்கின் சம்பவ இடம் அருகே சண்டை வழக்கு தொடர்பாக நன்னிலம் போலிசார் விசாரித்து வரைபடம் வரைந்தார்கள். அதில் நானும், முருகானந்தம் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். பார்வை மகஜரில் உள்ள என்னுடைய கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

எனக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் இருந்த விபரம் எனக்கு தெரியாது என்றாலும், அதை போலிசார் என்னிடம் படித்து காண்பிக்கவில்லை என்றாலும் சரிதான். நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.